முருகப்பெருமான் துணை

**மகான் சண்டேஸ்வர நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.05.2021, வியாழக்கிழமை

1. மும்மலக் குற்றம் அகற்றி
முழுமை ஞானம் தந்தருள
இம்மையில் மாதவசியாக வந்த
ஏழாம் படைவீட்டின் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட யோகபிரசன்ன ஆசி
இயம்பிடுவேன் பிலவ தகர் திங்கள்
3. திங்களிலே மூவேழீர் திகதி குருவாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 23ம் நாள், 06.05.2021 வியாழக்கிழமை)
தேசிகனுக்கு சண்டேஸ்வர நாயனாரும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடிலின் அருமை பெருமை
4. பெருமை உணர்ந்து மக்கள்வர
பிரணவ சக்தியான தீட்சையை
ஆறுமுக அரங்க மகானிடம்
அடைந்து உலகமக்கள் ஏற்று
5. ஏற்றுமே ஞானிகள் பூசையும்
எந்நாளும் நாமசெபம் போற்றி
ஆற்றல் கூட்டும் அரங்கஞானி
அன்னதான சேவையில் கலந்து
6. கலந்துமே தானதருமம் செய்து
கணக்காய் பொருளுதவி செய்து
பலம்தரும் அரங்கன் திருவடி
பணிந்து உலகமக்கள் தொடர
7. தொடரவே துன்பநிலை அகலும்
தொடரும் உயிர்பலி துன்பம்
பேரிடர்கள் அனைத்தும் விலகி
பேருலகமே பாதுகாப்பு பெறும்
8. காப்புதரும் கலியுக அவதார
கந்தவேலன் வரமான ஞானியை
ஒப்புகொண்டு உலகம் எங்கிலும்
ஓங்கார நாதம் முழங்கியே
9. முழங்கியே உலகம் எங்கிலும்
முருகப் பெருமான் வழிபாடு
கலங்கமற உயர் வழிபாடாக
கலியுகத்தில் பெருகி நிற்க

10. பெருகவே உலகம் எங்கிலும்
பேரிடரை தடுக்கும் விரட்டும்
ஆறுமுக சக்தியாக பெருகி
அழிவில்லா நல்லுலகம் ஆகும்

11. ஆகவே அரங்க ஞானி அவதாரம்
ஆக்கம் வழி உலகமாற்றம்
வகைபட சடுதி காண்கும்
வழங்கிய யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–